**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – அறிவிப்புகள் – 2022–2023 – திருப்பூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ரூ.1.00 கோடி செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்காக மூன்று சிறப்பு இல்லங்கள் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந–1 . 2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 16

நாள்: 28 .06.2022
சுபகிருது, ஆனி – 14
திருவள்ளுவர் ஆண்டு, 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 21.04.2022.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண் 7983/ம.இ.நிர்.2/2022, நாள் 22.04.2022.

-----

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்போது இன்ன பிறவற்றுடன் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> "முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்காக முதற்கட்டமாக, திருப்பூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் ரூ.1.00 கோடி செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் 3 சிறப்பு இல்லங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக, முதற்கட்டமாக திருப்பூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 75 நபர்கள் பயனடையும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிப்பு இல்லங்களை துவங்க 2022–2023ஆம் நிதியாண்டிற்கு ஒரு இல்லத்திற்கு ரூ.33,36,100/–என, மூன்று இல்லங்களுக்கு ரூ.1,00,08,300/– (ரூபாய் ஒரு கோடியே எட்டாயிரத்து முன்னூறு மட்டும்) தேவைப்படுவதாக தெரிவித்து மேற்காணும் இல்லங்களை துவங்குவதற்கான அனுமதியும் மற்றும் இவ்வில்லங்கள் துவங்குவதற்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறும் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேற்காணும் மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மூன்று மாவட்டங்களில் 75 நபர்கள் பயனடையும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு இல்லங்களை புதிதாக அமைப்பதற்கு, ஒரு இல்லத்திற்கு ரூ.33,36,100/- என மூன்று இல்லங்களுக்கு ரூ.1,00,08,300/- (ரூபாய் ஒரு கோடியே எட்டாயிரத்து முன்னூறு மட்டும்) செலவில் அமைக்க தற்போது நிர்வாக அனுமதியளித்து ஆணையிடுகிறது. மேலும் தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு வழங்க தேவையான கருத்துருவை உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.31710/நிதி(சந)/2022, நாள். 27.06.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிக்ள் நல அலுவலர்கள்.
(வழி) மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந)துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
30/6/22
30/06/2022